©
தமிழ்நாடு அரசு
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 3.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 49] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 2, 2020
கார்த்திகை 17, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு–2051

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழில் துறை

**அறிவிக்கைகள்**

***தொழில் (MMC.1) துறை***

*[அரசாணை (நிலை)எண்.169, நாள் :04 ஆகஸ்ட் 2020]*

1957-ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்தலும் முறைப்படுத்தலும்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1957) 15 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (1-A) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு சிறு கனிமச் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார்.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,

(1) விதி 2 இல், பகுதி (3) - க்கு பின்னர், பின்வரும் பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது :-

" (3-A "புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்பதில் "புவியியல் மற்றும் சுரங்கத்துறை துணை இயக்குநர்" என்பதும் அடங்கும்.

(2) விதி 8 - இல்,-

(a) துணை விதி (1) இல்,-

(i) பகுதி (a)க்கு பதிலாக , பின்வரும் பகுதி சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அவையாவன:-

"(a) மாவட்ட ஆட்சியர், இந்த விதிகளின் 8-9 மற்றும் 8-C விதிகளின் கீழ் வரும் கனிமங்களைத் தவிர ஏனைய சிறு கனிமங்களை வெட்டியெடுப்பதற்கு நிலத்தை குத்தகைக்கு வழங்குவதற்காக மூடிமுத்திரையிடப்பட்ட உறையில் ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பங்களை கோரும் அறிவிப்பு ஒன்றை மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும். மாவட்ட ஆட்சியர், அத்தகைய அறிவிப்பினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கு முன்னர், அதிகார வரம்பிற்குட்பட்ட வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து நிலம் கிடைக்கப்பெறும் அறிக்கையை பெற வேண்டும்.";

(ii) பகுதி (b) - இல், “மாவட்ட ஆட்சியர்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக”, “புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) துணை விதி (2 )- இன், (b) - பகுதியில், “மாவட்ட ஆட்சியர் அல்லது ஒப்பந்தப்புள்ளிக்கான விண்ணப்பங்களைப் பெறுவதற்கு மாவட்ட ஆட்சியரால் அதிகாரம் அளிக்கப்பெற்ற அதிகாரி", என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(c) துணை விதி (3) - இன், (d) - பகுதியில், “மாவட்ட ஆட்சியர்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(d) துணை விதியில் (4) - இல், “மாவட்ட ஆட்சியர்" என்ற சொற்றொடர் வரும் இடங்களிலெல்லாம் “புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(e) துணை விதிகள் (5),(6),(7) மற்றும் (10) - இல், “மாவட்ட ஆட்சியர்" என்ற சொற்றொடர் வரும் இடங்களிலெல்லாம் “புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(f) துணை விதி (7) - இல் ”மாவட்ட ஆட்சியரின் ஒப்ப அறிவிப்பு”என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநரின் ஒப்ப அறிவிப்பு” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(3) விதி 8-A இன் , துணை விதி (7) இல் ,

(a) "மாவட்ட ஆட்சியர், ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைமுறை முடிவுக்கு வந்த பின்னர், பெறப்பட்ட அனைத்து விண்ணப்பங்களையும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வாயிலாக மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும் ", என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “மாவட்ட ஆட்சியர், ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல நடைமுறை, முடிவுக்கு வந்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள், புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வாயிலாக, மாநில அரசுக்கு அவரின் பரிந்துரையை அனுப்ப வேண்டும்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) "அசல் விண்ணப்பத்துடன் ஒரு வாரத்திற்குள் அதனை அனுப்ப வேண்டும்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "அசல் விண்ணப்பத்துடன் அதனை அனுப்ப வேண்டும்" என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(4) விதி 8- C இன், துணை விதி (3) இல், பகுதி (a) இல், “ நேர்விற்கேற்ப, மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர், விண்ணப்பித்த பகுதியை குத்தகைக்கு வழங்கும்போது, அவ்வாறு வரையறுக்கப்பட வேண்டிய நிபந்தனைகளை குறிப்பிட்டு, புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வாயிலாக, மாநில அரசுக்கு விண்ணப்பத்தை அனுப்பவேண்டும் என்ற சொறொடருக்குப் பதிலாக, “ நேர்விற்கேற்ப, மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட வன அலுவலர், விண்ணப்பங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள் கால அளவிற்குள் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வாயிலாக மாநில அரசுக்கு விண்ணப்பங்களை அனுப்பவேண்டும் " என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும் ;

(5) விதி 19 - இல்,

(a) “மாவட்ட ஆட்சியர்” என்ற சொற்றொடர் வரும் இடங்களிலெல்லாம் “புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்” என்ற சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(b) துணை விதி (1) துணை விதி (1) - இன் பகுதி (a), - என மறு எண்ணிக்கையிடப்பட வேண்டும். அவ்வாறு மறு எண்ணிக்கையிடப்பட்ட பகுதி (a) - க்குப் பின்னர், பின்வரும் பகுதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். அவையாவன:-

"(b) புவியியல் மற்றும் சுரங்கத் துறை உதவி இயக்குநர் மறுப்புரைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை உறுதிபடுத்துவது உட்பட, இந்த விதிகளின், 19 மற்றும் 20 ஆம் விதிகளில் வரையறுக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி, நேர்குடிவார முறை நிலங்களில் யாதொரு கனிமத்தை வெட்டியெடுப்பதற்கு குத்தகை வழங்குவதற்கான விண்ணப்பங்களை பெற்று, தீர்வு செய்யவேண்டும். அவர், விண்ணப்பிக்கப்பட்ட நிலப்பட்டாவின் நம்பகத்தன்மை மற்றும் அரசு நிலம் சேர்க்கப்படாதது அல்லது கனிமத்தை வெட்டியெடுப்பதற்கான குத்தகைக்கு அளிப்பதற்கு முன்னர், நிலம் கையகப்படுத்தல் உட்பட, அரசின் நலனை உறுதி செய்வதற்கு, அதிகார வரம்பிற்குட்பட்ட வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து தடையில்லா சான்றிதழை பெற வேண்டும்.

(c) விதி 20 - இன் கீழ் கனிமத்தை வெட்டியெடுப்பதற்கான குத்தகை வழங்கப்பட்ட பின்னர், விண்ணப்பதாரர் பிற்சேர்க்கை- IV இல் உள்ள குத்தகை ஒப்பந்தத்தை புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநருடன் இணைந்து செயல்படுத்த வேண்டும். ";

(6) விதி 19-A இல்,-

(a) துணை விதி (1) இல், (b) பகுதிக்குப் பின்னர், பின்வரும் பகுதி சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அவையாவன:-

"(c) மாவட்ட ஆட்சியர், கனிமவளவாய்ப்பு ஆய்விற்கு அல்லது உரிமம் அல்லது குத்தகை பெறுவதற்கு அல்லது புதுப்பித்தலுக்கு வரப்பெறும் விண்ணப்பத்தினை, அவ்விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள் கால அளவிற்குள் புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வாயிலாக, மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும். மேலும், மறுப்புரைகளை (ஏதேனுமிருப்பின்) உறுதிப்படுத்துவது உட்பட, இந்த விதிகளின் 19, 20 ஆகிய விதிகளில் வரையறுக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்படும்.";

(b) துணை விதி (13) க்குப் பதிலாக, பின்வரும் துணை விதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:-

"(13) கனிமம் வெட்டியெடுப்பதற்கான குத்தகை பெறுவதற்கு அல்லது கனிமம் வெட்டியெடுப்பதற்கான குத்தகை புதுப்பித்தலுக்குப் பெறப்படும் விண்ணப்பம், அவ்விண்ணப்பம் பெறப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்கள் கால அளவிற்குள் மறுப்புரைகள் ஏதேனுமிருப்பின் அவை குறித்துக் கருதிப்பார்க்கப்பட்டு, புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் வாயிலாக மாவட்ட ஆட்சியரால், மாநில அரசுக்கு அனுப்பப்படும். மாநில அரசு, கருங்கல் வெட்டியெடுப்பதற்கு குத்தகைக்குக் கோருகின்ற விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில், மேற்சொன்ன நோக்கத்திற்கு நிலத்தை வழங்குவதற்கு முடிவுசெய்து, அவர்கள் முடிவை விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்க வேண்டும். மாநில அரசின் மேற்சொன்ன முடிவு பெறப்பட்டதன் பேரில், விண்ணப்பதாரர், 1999 ஆம் ஆண்டு கருங்கல் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டு விதிகளின் 12 ஆம் விதியின் படி, மூன்று மாதங்கள் கால அளவிற்குள் அல்லது மாநில அரசால் அனுமதிக்கப்பட்டவாறான மூன்று மாதங்களுக்கு மேற்படாத அத்தகைய மேற்கொண்டும் கால அளவிற்குள், ஏற்பளிக்கப்பெற்ற சுரங்கத்தொழில் திட்டவரைபடம் ஒன்றை அளிக்க வேண்டும்.

(7) "விதி 22 இல், இரண்டு இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(8) விதி 26 இல், "மாவட்டத்தின் ஆட்சியர்" மற்றும் "ஆட்சியர்" என்னும் சொற்றொடர்களுக்குப் பதிலாக, முறையே "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" மற்றும் "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர்கள் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(9) விதி 27 இல், "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(10) விதி 35 இல், "மாவட்டத்தின் ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(11) விதி 36 இல்,-

(a) துணை விதி (3) இல், இரண்டு இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(b) துணை விதி (5) இல், "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடர் எங்கெங்கு வரினும், அதற்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(12) விதி 36-B இல், துணை விதி (1) இல், "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(13) விதி 36-E இல், "மாவட்ட வன அலுவலர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட வன அலுவலர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(14) விதி 36-F இல், துணை விதி (5) இல், "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடர் எங்கெங்கு வரினும், அதற்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(15) விதி 41 இல்,-

(a) துணை விதி (4) இல், "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(b) துணை விதி (5) இல், "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(c) துணை விதி (10) இல், "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடர் எங்கெங்கு வரினும், அதற்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(16) விதி 42 இல், இரண்டு இடங்களில் வருகின்ற "மாவட்ட ஆட்சியர்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்னும் சொற்றொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்;

(17) விதி 43 இல்,-

(a) துணை விதி (3) இல்,

(i) பகுதி (i)க்குப் பதிலாக, பின்வரும் பகுதி அமைத்துக் கொள்ளப்பட வேண்டும். அதாவது:-

"(i) இந்த விதிகளின் 19-A ஆம் விதியில் வரையறுக்கப்பட்ட நடைமுறையானது, இரயத்துவாரி நிலங்களில், சிறுகனிமங்களை வெட்டியெடுப்பதற்கு, குத்தகை கோருவதற்குப் பெருந்தும். இந்த விதிகளின் கீழ், குத்தகைக்குக் கோருகின்ற விண்ணப்பங்கள் பிற்சேர்க்கை-VIIB உள்ள படிவத்தில் அளிக்கப்பட வேண்டும். இந்த விதிகளின் கீழ் மாவட்ட ஆட்சியரால் செயல்படுத்தத்தக்க அதிகாரங்களும், கடமைகளும், புவியியல் மற்றும் சுரங்கதொழில் உதவி இயக்குநரால் செயல்படுத்தப்படும்."

(j) பகுதி (iv)க்குப் பின்னர், பின்வரும் பகுதி சேர்த்துக் கொள்ளப்படவேண்டும் அவையாவன:-

"(v) புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் விண்ணப்பங்களைப் பெறவேண்டும். குத்தகை வழங்குவது தொடர்பான மறுப்புரைகளை உறுதிப்படுத்துவது உட்பட, இந்த விதிகளைச் சேர்ந்த 19 மற்றும் 20ஆம் விதிகளின் கீழ் உள்ள நடைமுறைகளை அவர் பின்பற்ற வேண்டும். விண்ணபித்த நிலத்தின் பட்டாவின் உண்மையான தன்மையை உறுதி செய்வதற்கும், நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட அரசு நிலம் அல்லது அரசு நலன்களை சேர்க்கப்படாமல் இருப்பதையும் உறுதி செய்திட புவியியல் மற்றும் சுரங்க உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட அதிகார வரம்பின் வருவாய் கோட்ட அலுவலரிடமிருந்து 'தடையின்மைச் சான்றிதழ்' பெறுவார். விண்ணபத்தைப் பெற்ற நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவர் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் வாயிலாக மாநில அரசுக்கு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும். புவியியல் மற்றும் சுரங்க துறை உதவி இயக்குநர் பரிந்துரையின் அடிப்படையில், மாநில அரசு உத்தரவுகளை பிறப்பிக்கும். அரசின் உத்தரவைப் பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் விண்ணப்பதாரரால் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநருடன் குத்தகை பத்திரம் செயல்படுத்தப்படும்.";

(b) துணை விதி (4)இல், பகுதி (iv)க்குப் பின்னர், பின்வரும் பகுதிகள் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:-

"(v) உத்தேசிக்கப்பட்டுள்ள நிலத்திற்கு குத்தகை வழங்க விண்ணப்பங்களைக் கோரும் அறிவிப்பை மாவட்ட ஆட்சியர் வெளியிட வேண்டும். அறிவிப்பு வெளியிடுவதற்கு முன்னர், மாவட்ட ஆட்சியர் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து நிலம் இருப்பு குறித்த விவர அறிக்கையைப் பெறவேண்டும்.

(vi) புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் அதன் பின்னர் விதி 8-A இல் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஏலம் முடிவடைந்த நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அவர் விண்ணப்பத்தை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் மூலம் மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும். புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநரின் பரிந்துரையின் அடிப்படையில், மாநில அரசு உத்தரவுகளை பிறப்பிக்கும். அரசின் உத்தரவைப் பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் விண்ணப்பதாரரால் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநருடன் குத்தகை பத்திரம் செயல்படுத்தப்படும்.";

(c) துணை விதி (5)இல், பகுதி (i)க்குப் பதிலாக பின்வரும் பகுதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:-

" (i) "இந்த தாதுக்களுக்கான குவாரிக் குத்தகை ஒரு மாநில அரசு நிறுவனம் அல்லது மாநில அரசுக்கு சொந்தமான கழகம் அல்லது மாநில அரசால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களுக்கு விதி 8-C இல் உள்ள விதிமுறைகளின்படி அனுமதி வழங்கப்படும். குத்தகை வழங்குவதற்கான விண்ணப்பம் பின்னிணைப்பு- VIIB இல் உள்ள படிவத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த விதிகளின் கீழ் மாவட்ட ஆட்சியர் பயன்படுத்தக்கூடிய அதிகாரங்கள் மற்றும் கடமைகள் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநரால் செயல்படுத்தப்படும்:

இருப்பினும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் சம்பந்தப்பட்ட வருவாய் கோட்ட அலுவலரிடமிருந்து உத்தேசிக்கப்பட்டுள்ள நிலம் தொடர்பாக நிலம் கையகப்படுத்துதல் உள்ளிட்ட அரசு நலன்களை உறுதிப்படுத்திட தடையில்லாச் சான்று பெற்று விண்ணப்பத்தினை புவியியல் மற்றும் சுரங்கத்துறை இயக்குநர் மூலம் விண்ணப்பம் பெறப்பட்ட ஒரு மாதத்திற்குள் மாநில அரசுக்கு அனுப்புவார். புவியியல் மற்றும் சுரங்க உதவி இயக்குநரின் பரிந்துரைகள் அடிப்படையில் மாநில அரசு உத்தரவுகளைப் பிறப்பிக்கும். அரசின் உத்தரவைப் பெற்ற நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் விண்ணப்பதாரரால் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநருடன் குத்தகை பத்திரம் செயல்படுத்தப்படும்."

(18) பின் இணைப்பு-Iஇல், "ஆட்சியர்" என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.;

(19) பின் இணைப்பு-IV இல்,-

(a) "[விதி எண்.19A மற்றும் 22ஐக் காண்க]" என்ற சொற்றொடருக்கு பதிலாக "[விதி எண்கள் 19, 19A மற்றும் 22ஐக் காண்க]" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(b) "ஆட்சியர்" என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(20) பின் இணைப்பு-IVA இல், படிவங்கள் I, II, III, IV மற்றும் V ஆகியவற்றில் "ஆட்சியர்" என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(21) பின் இணைப்பு-V இல்,-

(a) "[விதி எண்கள்.19A மற்றும் 33ஐக் காண்க]" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "[விதி எண்கள் 19, 19A மற்றும் 33ஐக் காண்க]" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(b) "ஆட்சியர்" என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

(22) பின் இணைப்பு-VIஇல், "ஆட்சியர்" என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் "மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(23) பின் இணைப்பு-VIDஇல், “ஆட்சியர்” என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் “மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(24) பின் இணைப்பு-VIIAஇல், “ஆட்சியர்” என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் “மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(25) பின் இணைப்பு-VII-Bஇல், “ஆட்சியர்” என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் “மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்;

(26) பின் இணைப்பு-Xஇல், “ஆட்சியர்” என்ற சொற்றொடர் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம் “மாவட்ட ஆட்சியர் அல்லது புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர்” என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்பட வேண்டும்.

**N. முருகானந்தம்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**இ. சுபாமதி,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண்.208, 21 செப்டம்பர் 2020]*

1957ஆம் ஆண்டு சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (மேம்படுத்துதல் மற்றும் முறைப்படுத்தல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 67/1951) பிரிவு 15ஆம் பிரிவைச் சேர்ந்த (1) மற்றும் (1A)ஆகிய உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு சிறு கனிமங்கள் சலுகை விதிகளில் பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறார், அவையாவன:-

**திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,-

(1) விதி8இல், துணை விதி (5)யின் (b)பகுதியைச் சேர்ந்த, உட்பகுதி (vii)இல், “ஒரு வார காலம்” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “பதினைந்து நாட்கள்”என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்படவேண்டும்.

(2) விதி 20க்குப் பதிலாக பின்வரும் விதி அமைத்துக்கொள்ளப்பட வேண்டும், அதாவது:-

“20. விண்ணபத்தை தீர்வு செய்தல்.- (1) விதி 19 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி எந்தவொரு விண்ணப்பமும் கிடைக்கப்பெற்றவுடன், புவியியல் மற்றும் சுரங்க உதவி இயக்குநர், செல்திறனுள்ள மறுப்புரை ஏதும் இல்லையென கருதுவாராயின், இந்த விதிகளில் குறிப்பிடப் பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, விண்ணப்பதாரருக்கு குவாரி குத்தகைக்கான அனுமதியை வழங்கலாம். ஆனால் இந்திய குடிமகனாக இல்லாத எந்தவொரு நபர் அல்லது அவரின் சார்பாக கனிமங்கள் தொடர்பான பணி மேற்கொள்ளப்பட வேண்டுமாயின், மாநில அரசின் முந்தைய அனுமதியை தவிர வேறு எந்த குத்தகையும் வழங்கப்படமாட்டாது.

(2)(a) இதுவரை கற்கள் வெட்டியெடுக்கப்படாத பகுதிகளைப் (Virgin Areas) பொறுத்தமட்டில், சாதாரண கற்களை வெட்டி எடுப்பதற்கான குறைந்தளவு குத்தகை கால அளவானது ஓராண்டிற்குக் குறைவாகவும், அத்தகைய குத்தகை வழங்குவதற்கான உயரளவு கால அளவு பத்தாண்டுகளுக்கு மேற்பட்டதாகவும் இருக்கக்கூடாது.

இருப்பினும், ஏற்கனவே ஐந்து வருட காலத்திற்கு சாதாரண கல் குவாரிக்கு குத்தகை அனுமதி வழங்கப்பட்ட குத்தகைதாரர், அங்கீகரிக்கப்பட்ட சுரங்கத் திட்டத்துடன் பின்னிணைப்பு-VIஇல் வரையறுக்கப்பட்டவாறான படிவத்தில் மேலும் ஐந்து ஆண்டு காலத்திற்கு குத்தகை நீட்டிப்பிற்கு விதி 41இன் துணை விதி (9) இன் கீழ் குத்தகைக் காலம் முடிவடைவதற்கு குறைந்தது 180 நாட்களுக்கு முன்பு புவியியல் மற்றும் சுரங்க துணை இயக்குநரிடம் விண்ணப்பிக்கலாம்;

(b) அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்டவுடன், புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் தொடர்புடைய இடத்தை ஆய்வு செய்து, அப்பகுதியில் கனிமங்கள் இருப்பினை உறுதி செய்வதுடன் மேற்படி குவாரி நடவடிக்கைகளுக்கு மனநிறைவடைவதன் பேரில் சட்டத்தின் எந்தவொரு விதிமுறைகளையும் மீறாமல் தொடக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட குத்தகை ஒப்பந்தத்திலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு முப்பது நாட்களுக்குள் மேற்கொண்டும் குத்தகை காலத்தை நீட்டிப்பதற்கு அனுமதி வழங்கவேண்டும்;

(c) குத்தகை நீட்டிப்புக்கான அனுமதி வழங்கும்போது, குத்தகைதாரர் ஒரு துணை குத்தகை ஒப்பாவணம் செய்துகொள்ளவேண்டும்.

(3) சாதாரண கல் மற்றும் கிரானைட் நீங்கலாக ஏனைய சிறு கனிமங்களை வெட்டி எடுப்பதற்கான அனுமதி வழங்கப்படும் குறைந்தளவு காலமானது ஒரு வருடத்திற்கும் குறைவாகவும், அதிகளவு காலம் மூன்று ஆண்டுகளுக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

(4) புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர், கற்கள் வெட்டி எடுப்பதற்கான அனுமதி வழங்க மறுத்தால், அதற்கான காரணங்களை விண்ணப்பதாரருக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கவேண்டும்."

(3) விதி41ஐச் சேர்ந்த, துணை விதி (1)இல்,-

(a) "சுரங்க வேலை சார்ந்த திட்டம்" என்ற சொற்றொடருக்குப் பின்னர், "அல்லது நேர்விற்கேற்ப, சுரங்க வேலைகள் திட்டம்" என்ற சொற்றொடர் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும்;

(b) "19 மற்றும் 38-A" என்ற பதிவுகளுக்குப் பதிலாக "19, 20 மற்றும் 38-A" என்ற பதிவுகள் அமைத்துக்கொள்ளப்படவேண்டும்;

(4) பின்னிணைப்பு VIஇல், "[விதிகள் 8 மற்றும் 19ஐக் காண்க]" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "[விதிகள் 8, 19 மற்றும் 20(2)(a) விதிகளைக் காண்க]" என்ற சொற்றொடர் அமைத்துக்கொள்ளப்படவேண்டும்.

**N. முருகானந்தம்,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**இ. சுபாமதி,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.